# பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு - 2023
# விடைக்குறிப்பு.

1.காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் ' நிலத்துக்கு நல்ல உரங்கள் .
இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது .
ஈ ) சருகும் சண்டும்
2.கோசல நாட்டில் கோடை இல்லாத காரணம் என்ன ?
அ) அங்கு வறுமை இல்லாததால்
3.சரியான அகர வரிசையை தேர்ந்தெடுக்க .
இ) உழவு , ஏர் , மண் , மாடு
4.பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ___________
வேண்டினார்
அ) கருணையன் எலிசபெத்துக்காக
5.பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது ? ஈ) இலா
6. அருந்துணை என்பது பிரித்தால் அ) அருமை + துணை
7. தீர்ப்பாக இத்தொடரில் அமைந்துள்ள தொகையை தெரிவு செய்க
ஆ) உருபும் பயனும் உடன் தொக்க தொகை
8.உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பை கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்.
ஆ)அதியன் - பெருஞ்சாத்தன்
9." நாற்றிசையும் செல்லாத நாடில்லை"
"ஐந்துசால்பு ஊன்றிய தூண்"

- இந்த செயலில் அடிகளில் இடம்பெற்றுள்ள எண்ணுப்பெயர்களையும் அவற்றுக்கான தமிழ் எண்களையும் தேர்க.

அ) நான்கு ஐந்து - ச, ரு
10. "கத்துங் குயிலோசை - சற்றே வந்து காதினில் பட வேண்டும்" பாரதியார் - இப்பாடல் அடியில் இடம் பெற்றுள்ள வழு அமைதி இ) மரபு வழுவமைதி
11. பாடி மகிழ்ந்தனர் எவ்வகை தொடர் என்பதை தேர்ந்தெடுக்கவும். ஆ) வினையெச்சத்தொடர்
12. ஈ) சிலப்பதிகாரம்
13. அ) பகர்வனர் ; பட்டினும்
14. ஆ) நெசவாளர்
15. இ) அகிலும் ; சந்தனமும்
16. தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறு கூடங்களின் பெயர்களை எழுதுக.
கேழ்வரகு, சாமை, தினை வரகு, பனிவரகு, கம்பு, குதிரைவாலி போன்றவை தமிழகத்தில் பரவலாகப் பயிரிடப்பட்டு வந்த முக்கியத் சிறுதானியப் பயிர்கள்.
17. விடைக்கேற்ற வினா அமைக்க.
அ) யார் பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.
ஆ) தமிழ் மக்களின் வீரத்தைச் சொல்லும் கலையாகத் திகழ்வது எது?
18. சதாவதானம் குறிப்பு வரைக.
'சதம்' என்றால் நூறு என்று பொருள். ஒருவரது புலமையையும் நினைவாற்றலையும் நுண்ணறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தலே சதாவதானம் ஆகும்.

19. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது? மன்னர் தம் நாட்டின் வளத்தையும் ஆட்சிச் சிறப்பையும் காலம் கடந்தும் உணர்த்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக புகழும் பெருமையும் அழியாத வகையில் அவை அனைத்தையும் கல்லில் செதுக்கினார்கள். இதுவே மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் ஆகும்.

20. குறிப்பு வரைக - "அவையும்"

அறம் கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணைபுரிந்தன. அவையே 'அவையம் ' என்று அழைக்கப்பட்டன . அறம் , அறக்கண்ட நெறிமான் அவையம் ' என்கிறது புறநானூறு .

21. திருக்குறள்

செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.

**22.** ஊர்ப் பெயர்களின் மரூஉவை எழுதுக

உதகமண்டலம் - உதகை,கும்பகோணம் - குடந்தை, திருநெல்வேலி - நெல்லை,சைதாப்பேட்டை - சைதை

**23.** பழமொழிகளை நிறைவு செய்க.

1.ஒரு பானைச் சோற்றுக்கு, ஒரு சோறு பதம்.
2.அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு

**24.** பகுபத உறுப்பிலக்கணம் தருக.

ஒலித்து - ஒலி + த் + த் + உ
ஒலி - பகுதி
த் - சந்தி
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**25.** கலைச்சொற்கள்.

Storm - புயல்   Patent - காப்புரிமை

**26**. <u>அன்புச்செல்வன்</u> திறன் பேசியின் <u>தொடுதிரை</u>யில் படித்துக்கொண்டிருந்தார். தொகைநிலையைக் கூறுக.

அன்புச்செல்வன் – இருபெயரொட்டுப் பண்புத்தொகை
தொடுதிரை – வினைத்தொகை

**27.**மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.

மனக்கோட்டை: படிக்காமலே தேர்வில் வெற்றிபெற்றுவிடலாம் என்று சில மாணவர்கள் மனக்கோட்டை கட்டுகிறார்கள்.

கண்ணும் கருத்தும்:

கண்ணும் கருத்தாய் கவனமுடன் படித்தால் முதல் மதிப்பெண் பெறலாம்.

28. குறள் வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.

குறள் வெண்பா என்பது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப் பெற்று இரண்டு அடிகளாய் வரும்.
முதலடி நான்கு சீராகவும், இரண்டாம் அடி மூன்று சீராகவும் வரும்.
(எ - கா)
செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல்.
29. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும், சமூக உறுப்பினராகவும் இயங்குவதற்கும், அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவுகிறது.

அரசியல் அறம்:
நீர் நிலையைப் பெருக்கி, நிலவளம் கண்டு, உணவுப் பெருக்கம் காண்பதும், அதனை அனைவருக்கும் கிடைக்கச்செய்வதும் அரசனின் அறம். இவ்வறம் இன்றைய சூழலில் காணப்படுகிறது.

வணிகத்தில் அறம்:
அறம் செய்வதில் வணிக நோக்கம் இருத்தல் கூடாது. நோக்கமின்றி அறம் செய்வதே வணிக அறனின் மேன்மையாகும்

30. உரை பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளி.
அ) போலச் செய்தல்
ஆ) புரவி ஆட்டம் ; புரவி நாட்டியம்
இ) மராட்டியர் காலத்தில்

31. சோலைக் (பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்கவும்.
பதில்:
மின் விசிறிக் காற்று : நண்பா! வா எங்கெல்லாம் சுற்றித் திரிந்து வருகிறாய்? என்னைப் போல் நிலையாக ஓரிடத்திலிருந்து வீசக் கூடாத.
சோலைக்காற்று : நீ ஓரிடத்தில் இருந்து நிலையாக வீசினாலும் உன்னை இயக்கி ஒருவர் தேவை. அது மட்டுமல்லாமல் நீ கொடுக்கும் வெப்பக்காற்றை மனிதர்கள் வேறு வழியின்றி பயன்படுத்துகின்றனர். மின்சாரம் தடைப் பட்டாலும் மனிதர்களால் உன்னை இயக்க முடியாது.
மின் விசிறிக் காற்று : மனிதர்கள் உன்னை விரும்புவார்களா?
சோலைக்காற்று : ஆம், நான் மக்களுக்குக் குளிர்ந்த காற்றைக் கொடுக்கிறேன். என்னில் இருந்து மின்சாரம் தயாரிக்கின்றனர். காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடத்திலும் தமிழகம் முதல் இடத்திலும் உள்ளது. புதுப்பிக்கக் கூடிய வளமான என்னைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிம வளங்கள் பாதுகாக்கப்படுகிறது.
மின் விசிறிக் காற்று : இத்தனை சிறப்புகள் கொண்ட உன்னை வைத்து ஒரு புது மொழி உலகிற்குக் கூறப்போகிறேன்.

சோலைக்காற்று : அப்படியா! அப்புது மொழி யாது?
மின் விசிறிக் காற்று : “காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக்கொள்”.

32. சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது – இடஞ்சுட்டிப் பொருள் கூறுக.

இடம் சுட்டல்: “சித்தாளு” என்னும் தலைப்பில் நாகூர் ரூமி எழுதியுள்ள கவிதையில் இவ்வடி இடம்பெற்றுள்ளது.

பொருள் : சித்தாளின் துன்பங்களைச் செங்கற்கள் அறிவது இல்லை.

விளக்கம் : அடுத்த வேளை உணவுக்காக சுமைகளை இறக்காமல் சுமக்கும் இவர்களின் மரணம்கூட சிறிதளவே சலனத்தை ஏற்படுத்தும். பல இன்னல்களின் நடுவே தன் வாழ்வைத் தொலைக்காத சுமை சுமக்கும் சித்தங்களின் மனச்சுமையைச் செங்கற்களும், கற்களும் அறியாது.

33.தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

| தமிழ் | கடல் |
|---|---|
| இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழாய் வளர்ந்தது. | முத்தினை அமிழ்ந்து தருகிறது. |
| முதல், இடை, கடை ஆகிய முச்சங்கங்களால் வளர்க்கப்பட்டது. | வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் ஆகிய மூன்று வகையான சங்குகளைத் தருகிறது. |
| ஐம்பெருங்காப்பியங்கள் அணிகலனாய்ப் பெற்றது. | மிகுதியான வணிகக் கப்பல்கள் வந்து சென்றது. |
| சங்கப்பலகையில் அமர்ந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தனர். | தன் அலையால் சங்கினைத் தடுத்து நிறுத்திக் காத்தது. |

34. நீதிவெண்பா

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை
அருத்துவதும் ஆவிக்கு அருந்துணையாய் இன்பம்
பொருத்துவதும் கல்வியென்றே போற்று.

35. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும் வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.
இப்பகுதியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.
பதில்:
மல்லிகைப்பூ

இரு பெயரொட்டுப் பண்புத்தொகை.
மல்லிகை என்னும் பூ (மல்லிகை – சிறப்புப் பெயர், பூ – பொதுப் பெயர்)
பூங்கொடி

உவமைத் தொகை
பூ போன்ற கொடி
தண்ணீர் தொட்டியில்

இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத் தொகை
தண்ணீரை ஊற்றும் தொட்டி
குடிநீர் நிரப்பினாள்

இரண்டாம் வேற்றுமைத் தொகை
குடிநீரை நிரப்பினாள்.

36. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறளில் பயந்து வரும் அணியை விளக்குக.

இப்பாடலில் உவமையணி பயந்து வந்துள்ளது.

அணி இலக்கணம் :
உவமை ஒரு வாக்கியமாகவும் உவமேயம் ஒரு வாக்கியமாகவும் உவம உருபு வெளிப்படையாக வருவது உவமையணி ஆகும்.
உவமை : வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிபறி செய்தல்.
உவமேயம் : ஆட்சி அதிகாரத்தைக் கொண்டு மன்னன் வரி விதித்தல்.
உவம உருபு : போல (வெளிப்படை)

விளக்கம் : ஆட்சியதிகாரத்தைக் கொண்டுள்ள அரசன் தன் அதிகாரத்தைக் கொண்டு வரி விதிப்பது, வேல் போன்ற ஆயுதங்களைக் காட்டி வழிப்பறி செய்வதற்கு நிகரானது ஆகும்.

37.

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டி | நேர் நேர் | தேமா |
| முறை/செய்/யா | நிரை நேர் நேர் | புளி மாங்காய் |
| மன்/னவன் | நேர் நிரை | கூவிளம் |
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டு | நேர் நேர் | தேமா |
| கெடும் | நிரை | மலர் |

இக்குறள் மலர் என்னும் வாய்பாடு பெற்று முடிகிறது.

**40.** காட்சியைக் கவினுற எழுதுக:



கலப்பையைத் தோளிலே
சுமந்து......
காலையிலே  கழனி செல்லும்
உழவனே.....நீ
ஏர் பிடித்து உழவு செய்து..
உணவுதானியங்களைக் குவித்தே..
உலகோர் அனைவருக்கும்
பசியினைப் போக்குவாயே...
உழுதுண்டு வாழ்வாரே
உலகின் உயர்ந்த மனிதன் !


ஞா.ஜோ. அந்தோனி பிரகாஷ்,
தமிழாசிரியர்,
தென் போஸ்கோ மேல்நிலைப் பள்ளி,
மதுரை.